*அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை கடிதம் : 01/2019*

எனது இலக்கம்: EST-3/DICIP/06/0272
பொது நிருவாக மற்றும்
அனர்த்தமுகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

*2019.03.19*

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**கறைநிரற் பட்டியலிடப்பட்ட அலுவலர்களை மீள சேவையில் அமர்த்துதல்**

கறைநிரற் பட்டியலிடப்பட வேண்டிய அரச அலுவலர்கள் தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்கிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிக் குறிப்பு XIX ஆம் அத்தியாயம் மற்றும் தாபன விதிக்கோவையின் I ஆம் வகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பால் தங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

02. அதற்கிணங்க, கறைநிரற் பட்டிலிடப்பட்ட மத்திய அரச அலுவலர்கள் தொடர்பான தகவல்கள் அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்குவிதிக் குறிப்பிற்குரிய பின்னிணைப்பின் பிராகரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். 2012.12.10 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் 08/2012 இன் ஏற்பாடுகள் மற்றும் எனது இலக்கம் EST-3/DICIP/06/0199 மற்றும் 2019.01.28 ஆந் திகதிய கடிதத்தின் ஆலோசனையின் படி மாகாண பிரதம செயலாளரினால் கறைநிரற் பட்டியலிடப்பட வேண்டிய மாகாண அரச சேவைக்குரிய அலுவலர்கள் தொடர்பான தகவல்கள் தங்களது மாகாண சபைக்கு உரிய நிறுவனத் தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு தாபன பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

03. அவ்வாறே, அலுவலரொருவரின் பெயர் கறைநிரற் பட்டியலில் இடம்பெற்றிருப்பின் அவர் இறுதியாக வகித்த பதவியை மீள அதே சேவையில் அமர்த்துவதற்கு தடைகள் ஏதுமில்லை. தற்போது கறைநிரற் பட்டியலிடப்பட்டுள்ள அலுவலரொருவரின் பெயர் அதிலிருந்து நீக்க முடிவது நிர்வாக நியாயத் தீர்ப்புச் சபையின் அல்லது வேறு நீதிமன்றமொன்றின் கட்டளையின் அடிப்படையில் அல்லது நியமன அதிகாரி / ஒழுக்காற்று அதிகாரியினால் மாத்திரமேயாகும். அவ்வாறு மீளவும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் அவரின் பெயரை கறைநிரற் பட்டியலிலிருந்து அகற்றுவதற்கு குறித்த அதிகாரியினால் வேண்டுகோளொன்று விடுக்கப்படுதல் வேண்டும்.

04. கறைநிரற் பட்டியலிடப்பட்டுள்ள அலுவலரொருவருக்கு மீண்டும் சேவைக்கு வருகை தருமாறு கட்டளையொன்று கிடைக்கப்பெற்றதன் பின்னர் அவ் அலுவலருக்கு சேவைக்கு அறிக்கையிடுமாறு ஆலோசனை வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அவ்வாறு சேவைக்கு அறிக்கையிட்டதன் பின்னர் அத்திகதியையும் குறிப்பிட்டு நியமன அதிகாரி / ஒழுக்காற்று அலுவலரினால் இணைப்பு 01 இல் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரியினை எனக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பிரசுரிக்கப்பட்ட கறைநிரற் பட்டியலிலிருந்து அவ் அலுவலரின் பெயரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

05. கறைநிரற் பட்டியலிடப்பட்ட மத்திய அரசினதும் மாகாண அரச சேவையினது அலுவலர்களது பெயர்களை உள்ளடக்கிய கறைநிரற் பட்டியல் WWW.pubad.gov.lk என்ற இணையத்தளத்தில் "விசேட அறிவிப்பு" எனும் தலைப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக மற்றும் அனர்த்த
முகாமைத்துவ அமைச்சு

**இணைப்பு *01***

**<u>கறைநிரற் பட்டியலிடப்பட்டுள்ள அலுவலர்களின் பெயரினை அகற்றுதல்</u>**

*1.* அலுவலரின் முழுப் பெயர்:-..........................................................................................................................

*2.* தேசிய அடையாள அட்டை இலக்கம்:-.......................................................................................................

*3.* கறைநிரற் பட்டியலிடப்பட்ட சந்தர்ப்பத்தின் போது கடமையாற்றிய அமைச்சு/ திணைக்களம்/ சேவை நிலையம்:- ................................................................................................................................................

*4.* கறைநிரற் பட்டியலிடும் போது வகித்த பதவி மற்றும் தரம்:-..............................................................................

*5.* அலுவலரின் பெயரை உள்ளடக்கிய கறைநிரற் பட்டியலின் பதிவிலக்கம், திகதி மற்றும் பெயருக்கு உரித்தான தொடரிலக்கம்:-.........................................................................................................................

*6.* மாகாண அரச சேவையில் / மத்திய அரசின் அலுவலரா என்பது பற்றி:-..........................................................

*7.* மீள சேவையில் அமர்த்துவதற்கு அதிகாரம் வழங்கிய கடிதத்தின் குறிப்பு :-..................................................

(அதிகாரியையும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்)

*8.* சேவைக்கு அறிக்கையிட்ட திகதி:-...............................................................................................................

மேற்படியான தகவல்களின் படி .......................................................................................திரு/திருமதி/செல்வியின் பெயர் கறைநிரற் பட்டியலிலிருந்து நீக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

திகதி:-.................................................

.................................................................................

ஒழுக்காற்று அலுவலரின் ஒப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை